மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.01/2022
அ.வ.எண்.145/2016

தேவன் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. பி. கமலகண்ணன்
2. பி. சரவணக்குமார்
3. பி. கண்ணப்பநாயுடு ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 02.03.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.முனுசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.ஜி.மாலதி அவர்கள் ஆஜராகியும், 3 ம் எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாத நிலையிலும், மனுதாரர் தரப்பில் வாதுரை முன்னிலைப்படுத்தாத நிலையில், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 14(2) மற்றும் பிரிவு 151 ன் கீழ் காலதாமதமாக தாக்கல் செய்யும் ஆவணத்தை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

### 1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் கிடைக்க பெறாததால் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மேற்படி ஆவணம் தற்போது தான் கிடைக்க பெற்றது. எனவே மனுவில் கண்ட ஆவணத்தை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 1ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் பொய்யானது. மனுவில் கூறியுள்ள ஆவணத்தை உரிய காலத்தில் பெற முடியவில்லை என மனுதாரர் கூறுவது பொய்யாகும். மனுவில் கூறியுள்ள ஆவணத்தை எப்போது யாரிடமிருந்து பெற்றார் என்பதையும், என்ன ஆவணம் என்பதையும் மனுவில் கூறவில்லை. மேலும் அந்த ஆவணம் பதிவு செய்யாததாலும், உரிய முத்திரைத்தாளில் ஏற்படாததாலும், துணை நோக்கங்களுக்காக கூட ஏற்றுக் கொள்ள இயலாது. மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் 2013 என குறிப்பிட்டுள்ள நிலையில் 2016 ல் தாக்கல் செய்துள்ள வழக்கில் கூறாமல் போர்ஜரியாக ஆவணத்தை தயார் செய்து சட்டத்திற்கு புறம்பான அனுகூலங்களை பெறுவதற்காக தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணத்தில் முதல் இரண்டு பக்கங்களில் கையெழுத்து ஏதும் காணப்படவில்லை. 3ம்பக்கத்திலுள்ள கையெழுத்து வேறொரு ஆவணத்திலிருந்து ஸ்கேன் செய்யப்பட்டு போர்ஜரியாக உருவாக்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் கிடைக்க பெறாததால் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது எனவும், மேற்படி ஆவணம் தற்போது தான் கிடைக்க பெற்றது எனவும், எனவே மனுவில் கண்ட ஆவணத்தை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக் கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) 1, 2 ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் பொய்யானது எனவும், மனுவில் கூறியுள்ள ஆவணத்தை உரிய காலத்தில் பெற முடியவில்லை என மனுதாரர் கூறுவது பொய் எனவும், மனுவில் கூறியுள்ள ஆவணத்தை எப்போது யாரிடமிருந்து பெற்றார் என்பதையும், என்ன ஆவணம் என்பதையும் மனுவில் கூறவில்லை எனவும், மேலும் பதிவு செய்யாததாலும், உரிய முத்திரைத்தாளில் ஏற்படாததாலும், துணை நோக்கங்களுக்காக கூட ஏற்றுக் கொள்ள இயலாது எனவும், மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் 2013 என குறிப்பிட்டுள்ள நிலையில் 2016 ல் தாக்கல் செய்துள்ள வழக்கில் கூறாமல் போர்ஜரியாக ஆவணத்தை தயார் செய்து சட்டத்திற்கு புறம்பான அனுகூலங்களை பெறுவதற்காக தாக்கல் செய்துள்ளார் எனவும், அந்த ஆவணத்தில் முதல் இரண்டு பக்கங்களில் கையெழுத்து ஏதும் காணப்படவில்லை எனவும், 3 ம்பக்கத்திலுள்ள கையெழுத்து வேறொரு ஆவணத்திலிருந்து ஸ்கேன் செய்யப்பட்டு போர்ஜரியாக உருவாக்கி தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென 1, 2 ம்எதிர்மனுதாரர்கள் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) மனுவினை பரிசீலனை செய்ததில் மனுவுடன் இணைக்கப்பட்ட 02.09.2013 தேதியிட்ட பதிவு செய்யப்படாத தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை காலதாமதமாக முன்னிலைப்படுத்துவதாகவும், ஆகவே மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) 1, 2 எதிர்மனுதாரர்கள் கூறுவது போல் போர்ஜரியான ஆவணமா என்பதை பரிசீலனை செய்ததில் மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் முதல் இரண்டு பக்கங்களில் கையெழுத்து ஏதும் காணப்படவில்லை. 3 வது பக்கத்தில் செட்டில்மெண்ட் செய்வது என்ற இடத்தில் கண்ணப்பன் என்பவரின் கையெழுத்தும், அதற்கு கீழ் சாட்சிகள் என்ற இடத்தில் சாட்சிகளின் கையெழுத்தும் உள்ளதாக காணப்படுகிறது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை 02.09.2013 ல் எழுதி கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் அந்த ஆவணத்தை வாங்கிய தேதி என 24.09.2013 என குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது ஆவணம் 24.09.2013 ல் வாங்குவதற்கு முன்பே 02.09.2013 ல் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது

போல் போர்ஜரியாக உருவாக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆகவே மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 02.09.2013 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் போர்ஜரியானது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 123–ன் கீழ் தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை கண்டிப்பாக பதிவு செய்திருக்கவேண்டும். ஆனால் மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரூ.20/– முத்திரைத்தாளில் ஏற்பட்டுள்ளதாகவும், பதிவு செய்யாமலும் உள்ளது தெரியவருகிறது. இந்நிலையில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கீழ்கண்ட முன்தீர்ப்பில் உரிய முத்திரைத்தாள்கள் ஏற்படாததும், பதிவு செய்யப்படாததும் ஆன ஆவணத்தை துணை நோக்கங்களுக்காக கூட ஏற்றுக் கொள்ளக் கூடாது என கீழ்கண்ட முன்தீர்ப்பில் கூறியுள்ளது.

<u>2020(1) CTC 47</u>

<u>Thangamuthu vs. Jeyaraj</u>

> "Document, inherently bad for non–registration, cannot be cured by paying deficit Stamp Duty and Penalty. Such documents cannot be looked into even for collateral purposes.

மேற்கண்ட முன்தீர்ப்பின்படிக்கு மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள ஆவணம் துணைநோக்கங்களுக்காக கூட ஏற்றுக்கொள்ள முடியாது என்பது தெரிய வருகிறது.

(vi) இச்சூழ்நிலையில் மனுதாரர் முன்னிலைப்படுத்தியுள்ள ஆவணத்தில் 02.09.2013 என தேதி குறிப்பிட்டுள்ள நிலையில், 2013 ல் ஏற்பட்ட ஆவணத்தை 22.08.2016 ல் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்பதற்கான எந்தவொரு ஏற்றுக்கொள்ளகூடிய காரணத்தையும் மனுவில் கூறவில்லை. எனவே தான செட்டில்மெண்ட் ஆவணம் போர்ஜரியானது என்பதாலும், உரிய முத்திரைத்தாளில் ஏற்படாததாலும், பதிவு செய்யப்படாததாலும், வழக்குரையுடன் தாக்கல் செய்யாததற்கு உரிய காரணத்தை கூறாததாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:— இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:— இல்லை

ஒப்பம்/—திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.